- **(235 අධිකාරය වූ) රේගු ආඥා පනතේ 10 වගන්තිය යටතේ යෝජනා සම්මතය** (2026 මාර්තු 03 දිනැති අංක 2478/03 දරන අති විශේෂ ගැසට් පත්‍රයේ පළ කරන ලද)

- **1979 අංක 40 දරන ශ්‍රී ලංකා අපනයන සංවර්ධන පනතේ 14 වගන්තිය යටතේ නියම** (2026 මාර්තු 03 දිනැති අංක 2478/04 දරන සහ 2026 මාර්තු 10 දිනැති අංක 2479/38 දරන අති විශේෂ ගැසට් පත්‍රවල පළ කරන ලද)

සම්බන්ධයෙන්

**රජයේ මුදල් පිළිබඳ කාරක සභාවේ වාර්තාව**

පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කරන ලද්දේ

**කාරක සභාවේ සභාපති**

**ගරු (ආචාර්ය) හර්ෂ ද සිල්වා මහතා විසිනි**

2026 ජූලි මස 08 වැනි බදාදා

- **(அத்தியாயம் 235) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழான தீர்மானம்** (2026 மாச்சு 03 ஆம் திகதிய 2478/03 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது)

- **1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழான கட்டளைகள்** (2026 மாச்சு 03 ஆம் திகதிய 2478/04 ஆம் இலக்க மற்றும் 2026 மாச்சு 10 ஆம் திகதிய 2479/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது)

தொடர்பிலான

அரசாங்க நிதி பற்றிய குழுவின் அறிக்கை

**குழுவின் தவிசாளர்**

**கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா அவர்களினால்**

2026 ஜூலை மாதம் 08 ஆம் திகதி புதன்கிழமை

பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது

# Report of the Committee on Public Finance

on

- **Resolution under Section 10 of the Customs Ordinance (Chapter 235)** (Published in the Gazette Extraordinary No. 2478/03 of 03rd March 2026)

- **Orders under Section 14 of the Sri Lanka Export Development Act, No. 40 of 1979** (Published in the Gazettes Extraordinary No. 2478/04 of 03rd March 2026 and No. 2479/38 of 10th March 2026)

Presented to Parliament

by

**Hon. (Dr.) Harsha de Silva**

**Chair of the Committee**

Wednesday, the 08th July 2026

## කාරක සභා වාර්තාව

රජයේ මුදල් පිළිබඳ කාරක සභාව 2026 ජූලි මස 06 වැනි දින පැවැත් වූ එහි රැස්වීමේ දී පහත සඳහන් යෝජනා සම්මතය සහ නියම සලකා බලන ලදී:

- **(235 අධිකාරය වූ) රේගු ආඥා පනතේ 10 වගන්තිය යටතේ යෝජනා සම්මතය** (2026 මාර්තු 03 දිනැති අංක 2478/03 දරන අති විශේෂ ගැසට් පත්‍රයේ පළ කරන ලද)

- **1979 අංක 40 දරන ශ්‍රී ලංකා අපනයන සංවර්ධන පනතේ 14 වගන්තිය යටතේ නියම** (2026 මාර්තු 03 දිනැති අංක 2478/04 දරන සහ 2026 මාර්තු 10 දිනැති අංක 2479/38 දරන අති විශේෂ ගැසට් පත්‍රවල පළ කරන ලද)
  *(2026 ජූනි 24 වැනි දින පාර්ලිමේන්තුවට ඉදිරිපත් කරන ලදුව කාරක සභාවට යොමු කරන ලද)*

**කාරක සභාව විසින් සලකා බැලූ දිනය: 2026 ජූලි මස 06** **වේලාව : ප.ව. 02.00**

**<u>පැමිණි රජයේ මුදල් පිළිබඳ කාරක සභා සභිකයන්</u>**

1. ගරු (ආචාර්ය) හර්ෂ ද සිල්වා මහතා, පා.ම.,
2. ගරු චතුරංග අබේසිංහ මහතා, පා.ම.,
3. ගරු (ආචාර්ය) කෞශල්‍යා ආරියරත්න මෙනෙවිය, පා.ම.,
4. ගරු රවී කරුණානායක මහතා, පා.ම.,
5. ගරු හර්ෂණ රාජකරුණා මහතා, පා.ම.,
6. ගරු නිමල් පලිහේන මහතා, පා.ම.,
7. ගරු නීතිඥ චිත්‍රාල් ප්‍රනාන්දු මහතා, පා.ම.,
8. ගරු නීතිඥ ලක්මාලි හේමචන්ද්‍ර මෙනෙවිය, පා.ම.,

- **(235 අධිකාරය වූ) රේගු ආඥා පනතේ 10 වගන්තිය යටතේ යෝජනා සම්මතය** (2026 මාර්තු 03 දිනැති අංක 2478/03 දරන අති විශේෂ ගැසට් පත්‍රයේ පළ කරන ලද)

***<u>හැඳින්වීම</u>***

ජාතික තීරු බදු ප්‍රතිපත්තිය (National Tariff Policy) ක්‍රියාත්මක කිරීම සම්බන්ධයෙන් වන 2026 අයවැය යෝජනාව පරිදි, එනම් මෙරටට ආනයනය කරන භාණ්ඩ මත ක්‍රියාත්මකව පැවති 0%, 15% සහ 20% වන රේගු ආනයන බදු අනුපාතයන් 0%, 10%, 20% සහ 30% ක් ලෙස කාණ්ඩ 04ක් (Four-Band Tariff Structure) වන පරිදි 2026 අප්‍රේල් මස සිට ක්‍රියාත්මක වන පරිදි සංශෝධනය කිරීම සඳහා සහ ඒ වන විට අමාත්‍ය මණ්ඩල අනුමැතිය ලැබී තිබූ ජාතික තීරු බදු ප්‍රතිපත්ති කමිටුවේ නිර්දේශයන් සහිත රේගු ආනයන බදු සංශෝධන ක්‍රියාත්මක කිරීම සඳහා 1962 අංක 19 ආදායම් සංරක්ෂණ පනත යටතේ, ජාතික තීරු බදු ප්‍රතිපත්තියේ ක්‍රම වේදයන්ට අනුකූලව 2026 මාර්තු 03 දිනැති අංක 2478/03 දරන ගැසට් නිවේදනය 2026 අප්‍රේල් 01 දින සිට බලාත්මක වන පරිදි ප්‍රකාශයට පත් කර ඇත.

මෙරට අපනයන ඉලක්ක සාක්ෂාත් කර ගැනීමේ පරමාර්ථයෙන් එක්සත් ජාතීන්ගේ පුළුල් ආර්ථික වර්ගීකරණයේ 5 වන සංස්කරණය [United Nations Broad Economic Categories (BEC) Revision 5] පදනම් කරගෙන පහත සඳහන් පරිදි රේගු ආනයන බදු අනුප්‍රමාණයන් කාණ්ඩ ගතවන ලෙස රේගු ආනයන බදු ව්‍යුහයට ගැලපීම් කිරීමට මෙම ගැසට් නිවේදනය මගින් කටයුතු කර ඇත. එනම්,

| **කාණ්ඩය** | **අනුපාතය** |
|---|---|
| ප්‍රාග්ධන භාණ්ඩ (Capital Goods) | 0% හෝ 10% |
| අතරමැදි භාණ්ඩ (Intermediate Goods) | 0% හෝ 10% |
| පාරිභෝජන භාණ්ඩ (Consumption Goods) | 20% හෝ 30% |

ඒ අනුව, ප්‍රධාන වශයෙන් ක්‍රියාත්මකව පැවති 0%, 15% සහ 20% ක් වූ රේගු ආනයන බදු අනුප්‍රමාණයන් ඉහත BEC වර්ගීකරණයේ 5 වන සංස්කරණය ද පදනම් කරගෙන 0%, 10%, 20% හා 30% ලෙස මෙහිදී පහත සඳහන් පරිදි කාණ්ඩගත කිරීමට කටයුතු කර ඇත.

| රේගු ආනයන බදු ව්‍යුහය | | | | |
|---|---|---|---|---|
| | **2026.03.31 දිනට පැවති** | | **2026.04.01 දින සිට බලාත්මක වන** | |
| රේගු ආනයන බදු අනුප්‍රමාණ | රේගු සංකේතාංක ගණන | ප්‍රතිශතය (%) | රේගු සංකේතාංක ගණන | ප්‍රතිශතය (%) |
| 0% (නිදහස්/ Free) | 3,725 | 45.6% | 3,576 | 45.7% |
| 10% | - | - | 406 | 4.9% |
| 15% | 526 | 6.4% | - | - |
| 20% | 2,660 | 32.5% | 2,195 | 26.7% |
| 30% | - | - | 582 | 7.1% |
| මිශ්‍ර අනුප්‍රමාණ (Mixed Rates) | 413 | 5.1% | 411 | 5.0% |
| විශේෂිත අනුප්‍රමාණ (Specific Rates) | 852 | 10.4% | 875 | 10.6% |
| **එකතුව** | **8,176** | **100.0%** | **8,225** | **100.0%** |

ඉහත සඳහන් ප්‍රතිශතාත්මක බදු අනුප්‍රමාණයන්ට අමතරව, ක්‍රියාත්මකව පැවති මිශ්‍ර අනුපාතයන්ද (Mixed Rates) ඊට අනුරූපීව ගැලපීම් සිදු කර ඇත. එසේ වුව ද, ක්‍රියාත්මකව පැවති විශේෂිත බදු අනුප්‍රමාණයන් (Specific Rates) නොවෙනස්ව ක්‍රියාත්මක කිරීමට කටයුතු කර ඇත. එසේම මෙම වර්ගීකරණය අන්තර්ජාතික වශයෙන් පිළිගත් ක්‍රමවේදයකට යටත්ව සිදු කරනු ලැබුවද, දැනට රේගු ආනයන බද්ද 0% (නිදහස් /Free) වන භාණ්ඩ සඳහා එම බදු අනුප්‍රමාණය තවදුරටත් නොවෙනස්ව පවත්වා ගැනීමට කටයුතු කර ඇත. එමෙන්ම මෙම BEC වර්ගීකරණයේ 5 වන සංස්කරණයට අනුව අතරමැදි භාණ්ඩ ලෙස සැලකුව ද, රාජ්‍ය ආදායමට බලපෑමක් සිදුවිය හැකි බැවින් 20% ක රේගු ආනයන බදු අනුප්‍රමාණයක් යටතේ ක්‍රියාත්මකව පැවති අතරමැදි භාණ්ඩ සඳහා වන රේගු ආනයන බද්ද මෙහිදී සංශෝධනයකට භාජනය කර නොමැත.

කෙසේ වුව ද, මෙහිදී විවිධ අමාත්‍යාංශ මගින් මෙම වාර්ගීකරණය සම්බන්ධයෙන් ඉදිරිපත් කරන ලද යෝජනාවන් සැලකිල්ලට ගෙන නිෂ්පාදන කාර්යය සඳහා අවශ්‍ය සහය, ආදායම් බලගැන්වීම සහ පාරිභෝගිකයන්ගේ සුරක්ෂිතභාවය යන කරුණු අතර සමබරතාවය සඳහා තෝරාගත් ක්ෂේත්‍රවලට ඉලක්කගත ගැලපුම් සිදුකර තිබේ.

එමෙන්ම, අමාත්‍ය මණ්ඩල අනුමැතිය ලැබී ඇති ජාතික තීරු බදු ප්‍රතිපත්ති කමිටුවේ නිර්දේශයන් සහිත, කාලීන අවශ්‍යතාවයන් මත, දේශීය කෘෂි හා කර්මාන්ත ක්ෂේත්‍රයන්ගේ උන්නතිය සඳහා යෝජනා කර තිබූ තල් හා තල් ආශ්‍රිත නිෂ්පාදන, එළවළු වර්ග, දේශීය ඖෂධ නිෂ්පාදනය සඳහා වන අමුද්‍රව්‍ය, රබර් නිෂ්පාදන, කෘත්‍රිම ලෙස නිෂ්පාදනය කළ දැල් රෙදි, ජල නල උපාංග, මුද්‍රණ යන්ත්‍ර, රෙදි සෝදන යන්ත්‍ර සහ ශල්‍ය කර්ම ඉදිකටු සඳහා නව ජාතික උප බෙදුම් රේගු සංකේතාංකයන් (New National Sub Divisions Harmonized System Codes) මේ සමඟ බලාත්මක කිරීමට, සහ දේශීය කර්මාන්ත ක්ෂේත්‍රයේ ප්‍රගමනය සඳහා යෝජනා කර තිබූ කඩදාසි බට, ඖෂධ ආවරණය සඳහා යොදා ගනු ලබන ඇලුමිනියම් පටක, ලයිටර් සහ වැඩිහිටි සහ ළමුන් සඳහා වන කසල අවශෝෂක ආස්තරණ (ඩයර්පස්) නිෂ්පාදනය සඳහා අවශ්‍ය අමුද්‍රව්‍ය ආනයනය කිරීමේ දී අදාළ වන රේගු ආනයන බදු සංශෝධනයන් ක්‍රියාත්මක කිරීමට ද මීට සමගාමීව සිදුකිරීමට කටයුතු කර ඇත.

ඒ අනුව, 1962 අංක 19 ආදායම් සංරක්ෂණ පනත යටතේ ප්‍රකාශයට පත්කළ 2026 මාර්තු 03 දිනැති අංක 2478/03 දරන ගැසට් නිවේදනය, එම පනතේ නීතිමය අවශ්‍යතාවයන්ට අනුව පාර්ලිමේන්තුවේ අනුමත කර ගැනීමට සහ මෙම රේගු ආනයන බදු සංශෝධනයන් රේගු ආඥා පනතේ (235 වැනි අධිකාරය) 10 වගන්තිය යටතේ යෝජනාවක් ලෙස පාර්ලිමේන්තුවේ සම්මත කර ගැනීම සඳහා ඉදිරිපත් කර ඇත.

***කාරක සභාවේ නිරීක්ෂණ***

කාරක සභාව විසින් පහත කරුණු පිළිබඳව නිරීක්ෂණය කළා ය.

- පැරා-තීරුබදු (para-tariffs) මත යැපීම අවම කිරීම මගින් තීරුබදු ව්‍යුහය තාර්කික කිරීම, කාර්මික සංවර්ධනය ප්‍රවර්ධනය කිරීම, වෙළඳ ලිහිල්කරණය සහ වෙළඳ පාලන ක්‍රමය තුළ වඩාත් විනිවිදභාවයක් සහ පුරෝකථනය කිරීමේ හැකියාවක් ඇති කිරීම අරමුණු කරගත් ජාතික තීරුබදු ප්‍රතිපත්තියට අනුකූලව මෙම යෝජනාව සකස් කර ඇත. ප්‍රාග්ධන සහ අතරමැදි භාණ්ඩ සඳහා සාමාන්‍යයෙන් අඩු බදු අනුපාත ද, පරිභෝජන භාණ්ඩ සඳහා වැඩි බදු අනුපාත ද අදාළ වන එක්සත් ජාතීන්ගේ පුළුල් ආර්ථික කාණ්ඩ (BEC) (සංශෝධනය 5) ට අනුකූලව, පෙර පැවති තෙවැදෑරුම් බදු ව්‍යුහය වෙනුවට 0%, 10%, 20% සහ 30% යන සිව්වැදෑරුම් රේගු ආනයන බදු (CID) ව්‍යුහයක් මෙම යෝජනාව මගින් හඳුන්වා දෙන බව තවදුරටත් නිරීක්ෂණය විය.

- අතරමැදි භාණ්ඩ සඳහා අදාළ වන CID අනුපාත 10% කට සීමා කිරීම (උපරිම 20% කට යටත්ව) සහ නිමි භාණ්ඩ සඳහා වන බදු 20% සිට 30% දක්වා පරාසයක පවත්වා ගැනීම මගින් තීරුබදු ආරක්ෂණය ක්‍රමයෙන් අඩු කිරීම දිගුකාලීන ප්‍රතිපත්තිමය අරමුණයි. තීරුබදු ලේඛනය සංයෝජිත වර්ගීකරණ සංකේතාංක (රේගු සංකේතාංක/ HS කේත) 8,225 කින් සමන්විත වන අතර, ඉන් ප්‍රාග්ධන සහ අතරමැදි භාණ්ඩවලට අදාළ HS කේත 3,725 ක් පැරා-තීරුබදුවලින් නිදහස් කර ඇති බවත්, මෙම යෝජනාව මගින් සංශෝධනය කරනු ලබන්නේ සීමිත තීරුබදු කාණ්ඩ සංඛ්‍යාවක් පමණක් වන අතර බහුතරයක් ශුන්‍ය බදු සහිත (zero-rated) තීරුබදු කාණ්ඩ නොවෙනස්ව පවතින බවත් නිරීක්ෂණය විය.

- පවතින නිදහස් වෙළඳ ගිවිසුම් (FTAs) යටතේ වන තීරුබදු සහන ක්‍රමයෙන් ක්‍රියාත්මක වෙමින් පවතින අතර, යෝජිත ගිවිසුම් සහ පවතින ගිවිසුම්වල සංශෝධන ක්‍රියාත්මක කිරීමට පෙර තවදුරටත් ඇගයීමට ලක් වෙමින් පවතී. නිදහස් වෙළඳ ගිවිසුම් කැපවීම් යටතේ ආවරණය වන භාණ්ඩ පසුව සිදු කරනු ලබන රේගු ආනයන බදු ගැලපීම්වලට යටත් නොවන බව ද නිරීක්ෂණය විය.

- මුදල් අමාත්‍යාංශය ජාත්‍යන්තරව පිළිගත් තීරුබදු වර්ගීකරණ ක්‍රමවේද අනුගමනය කරන අතර තීරුබදු යෝජනා සැකසීමෙන් අනතුරුව අදාළ අංශ සමඟ සාකච්ඡා පවත්වනු ඇත.

- අවශ්‍ය අවස්ථාවලදී දේශීය කෘෂිකාර්මික නිෂ්පාදන ආරක්ෂා කිරීම සඳහා, විශේෂයෙන් ආහාර ද්‍රව්‍ය සම්බන්ධයෙන් විශේෂ වෙළඳ භාණ්ඩ බද්ද (SCL) තවදුරටත් ප්‍රතිපත්තිමය මෙවලමක් ලෙස ක්‍රියා කරයි.

- පැරා-තීරුබදු ක්‍රමයෙන් අඩු කිරීම ඇතැම් දේශීය කර්මාන්තවලට, විශේෂයෙන් ටයිල් සහ වානේ අංශවලට අහිතකර ලෙස බලපෑ හැකි අතර, පවතින පැරා-තීරුබදු පාලන ක්‍රමය ඉදිකිරීම් සහ සංචාරක වැනි අංශවල යෙදවුම් පිරිවැය ඉහළ යාමට හේතු වී ඇත. මූල්‍ය හා තාක්ෂණය සඳහා ප්‍රවේශය වැඩිදියුණු කිරීම තුළින් කාර්මික තරඟකාරිත්වය ශක්තිමත් කිරීමේ පියවර මගින් තීරුබදු ප්‍රතිසංස්කරණ පරිපූර්ණ විය යුතු බව කාරක සභාව තවදුරටත් නිරීක්ෂණය කළා ය.

- ඇතැම් අංශවල භාණ්ඩ ඉවත දැමීම (dumping) සහ රේගු තක්සේරු කිරීමේ අක්‍රමිකතා පිළිබඳ චෝදනා දිගටම පවතින අතර, අඩු මිල ගණන් යටතේ ඉන්වොයිසි කිරීම (under-invoicing) සහ තක්සේරු කිරීමේ අවදානම් අවම කිරීම සඳහා අදාළ බලධාරීන් පියවර හඳුන්වා දී ඇති බව නිරීක්ෂණය විය.

- වාණිජ දෙපාර්තමේන්තුවේ වෙබ් අඩවිය 2021 වසරේ සිට වෙළඳාමට අදාළ දත්ත සමඟ යාවත්කාලීන කර නොමැති අතර, එමගින් වෙළඳ ගිවිසුම් ක්‍රියාත්මක කිරීම සහ එහි බලපෑම පිළිබඳ යාවත්කාලීන තොරතුරු ලබා ගැනීමට මහජනතාවට ඇති අවස්ථාව සීමා වී ඇත.

***<u>කාරක සභාවේ නිර්දේශ</u>***

කරුණු සලකා බැලීමෙන් පසුව කාරක සභාව විසින් පහත නිර්දේශය ඉදිරිපත් කළා ය.

- දත්ත මත පදනම් වූ මහජන කතිකාවතක් සහතික කිරීම සඳහා, වෙළඳ අමාත්‍යාංශය (වාණිජ දෙපාර්තමේන්තුව) 2021 වසරේ සිට යාවත්කාලීන කර නොමැති සිය නිල වෙබ් අඩවියේ වෙළඳ පරිමාව පිළිබඳ දත්ත යාවත්කාලීන කළ යුතු අතර, විශේෂයෙන් සියලුම නිදහස් වෙළඳ ගිවිසුම් (FTAs) යටතේ වෙළඳ පරිමාවේ කාර්ය සාධනය හඳුනාගත යුතුය.

- මුදල් අමාත්‍යාංශය සහ කර්මාන්ත අමාත්‍යාංශය සමඟ සම්බන්ධීකරණයෙන්, වෙළඳ හා ආයෝජන ප්‍රතිපත්ති දෙපාර්තමේන්තුව විසින් නව සිව්වැදෑරුම් තීරුබදු ව්‍යුහය (0%, 10%, 20%, 30%) මගින් ඇතිවන ඉල්ලුම-සැපයුම වෙනස්වීම් ගණනය කිරීම සඳහා විද්‍යාත්මක තීරුබදු සමාකරණ ආකෘති (scientific tariff simulation modeling) ක්‍රියාත්මක කළ යුතු අතර දේශීය කර්මාන්ත කෙරෙහි එහි ශුද්ධ බලපෑම ඇගයීමට ලක් කළ යුතුය.

- පරස්පර විරෝධී අර්ථකථන මගින් තරඟකාරී කලාපීය මධ්‍යස්ථානයක් වීමේ ශ්‍රී ලංකාවේ අරමුණට බාධා නොවන බව සහතික කරමින්, ප්‍රතිඅපනයන වෙළඳාම (Entrepot trading) සඳහා බදු පැනවීම සම්බන්ධයෙන් දේශීය ආදායම් දෙපාර්තමේන්තුව (IRD) ශ්‍රී ලංකා රේගුව මෙන්ම එකම නියාමන අනුකූලතාවයකින් කටයුතු කරන්නේද යන්න තීරණය කිරීම සඳහා සූක්ෂම සත්‍යාපනයක් සිදු කළ යුතුය.

- තාර්කික පදනමකින් තොරව ප්‍රතිපත්ති ක්‍රියාත්මක කිරීමෙන් සිදුවන අහිතකර බලපෑම් මගහරවා ගැනීම සඳහා, අනාගත ආනයන සීමා කිරීම් හෝ අහඹු (ad-hoc) සීමා කිරීම් සැබෑ ලෝකයේ වෙළඳ දත්ත සහ විද්‍යාත්මක සාධාරණීකරණයන්ට එරෙහිව මැනවින් තහවුරු කළ යුතුය.

- **1979 අංක 40 දරන ශ්‍රී ලංකා අපනයන සංවර්ධන පනතේ 14 වගන්තිය යටතේ නියම** (2026 මාර්තු 03 දිනැති අංක 2478/04 දරන සහ 2026 මාර්තු 10 දිනැති අංක 2479/38 දරන අති විශේෂ ගැසට් පත්‍රවල පළ කරන ලද)

***හැඳින්වීම***

මුදල්, ක්‍රම සම්පාදන සහ ආර්ථික සංවර්ධන අමාත්‍යවරයා විසින් ඉදිරිපත් කළ '1962 අංක 19 දරන ආදායම් සංරක්ෂණ පනත යටතේ රේගු ආනයන බද්ද (තීරු බද්ද) (Customs Import Duty) ජාතික තීරු බදු ප්‍රතිපත්තියට අනුකූලව සංශෝධනය කිරීම සඳහා අමාත්‍ය මණ්ඩල අනුමැතිය ලබා ගැනීම' මැයෙන් වූ අංක 26/0302/804/038 හා 2026.02.12 දිනැති අමාත්‍ය මණ්ඩල සංදේශය සඳහා 2026.02.23 දිනැතිව ලැබී ඇති අමාත්‍ය මණ්ඩල අනුමැතිය ප්‍රකාරව අලුතින් ප්‍රකාශයට පත්කරන ලද සංයෝජිත වර්ගීකරණ සංකේතාංක (රේගු සංකේතාංක) (HS Codes) 37ක් මත ක්‍රියාත්මක වන සෙස් බද්ද ප්‍රකාශයට පත්කිරීම, එමඟින් ඉවත් වන රේගු සංකේතාංක 11 ක් ද සමඟ 2026 අයවැය යෝජනා අංක 35.1 අනුව ආහාරයට ගන්නා තෙල් වලට අදාළ රේගු සංකේතාංක 17ක් මත පනවා ඇති සෙස් බද්ද ඉවත් කිරීම හා ශ්‍රී ලංකා - සිංගප්පූරු නිදහස් වෙළඳ ගිවිසුම යටතේ වන රේගු සංකේතාංක 02 ක් (අලුතින් ඇති කළ) මත සෙස් බද්ද පැනවීම සඳහා 1979 අංක 40 දරන ශ්‍රී ලංකා අපනයන සංවර්ධන පනත යටතේ නිකුත් කරන ලද නියමය, 2026 මාර්තු 03 දිනැති අංක 2478/04 අංක දරන අතිවිශේෂ ගැසට් පත්‍රය මගින් ප්‍රකාශයට පත් කරන ලදී.

තවද නිෂ්පාදන කර්මාන්ත ප්‍රවර්ධනය කිරීම, ජාත්‍යන්තර වෙළඳාම සඳහා දැනට පවතින බාධක ඉවත් කිරීම හා කෘෂි කර්මාන්තය ඇතුළු දේශීය කර්මාන්ත හා ව්‍යාපෘති සඳහා අවශ්‍ය දිරි ගැන්වීම් හා පහසුකම් සැලසීමේ අරමුණින්, 1979 අංක 40 දරන අපනයන සංවර්ධන පනතේ 14 වගන්තිය යටතේ තෝරාගත් භාණ්ඩ ආනයනයේ දී පනවනු ලබන සෙස් බද්ද, අදියර වශයෙන් ඉවත් කිරීම ඔස්සේ තීරු බදු ව්‍යුහය සඳහා ප්‍රධාන ප්‍රතිසංස්කරණයක් සිදු කිරීම 2023 අයවැයෙහි අයවැය යෝජනා අංක 34.6 යටතේ හඳුන්වා දුන් අතර, එහි පළමු අදියර 2023 මාර්තු 28 දිනැති අංක 2325/06 දරන ගැසට් නිවේදනය ඔස්සේ ක්‍රියාත්මක කර තිබේ.

තවදුරටත්, 2026 අංක 35.3 දරන අයවැය යෝජනා අනුව තෝරාගත් ආනයනික රෙදි සඳහා එකතු කළ අගය මත බද්ද (VAT) හඳුන්වා දීමට සමගාමීව රේගු සංකේතාංක (HS Code) 265 ක සෙස් බද්ද ඉවත් කිරීමට හඳුනා ගන්නා ලද අතර, ආනයනික බදු ව්‍යුහය තර්කානුකූල පදනමින් ඉදිරිපත් කිරීම අපනයන තරඟකාරිත්වය වැඩි කිරීම සහ තීරු බදු ක්‍රමවේදයෙහි විනිවිද භාවය වැඩි දියුණු කිරීම සඳහා ලෝක බැංකුවේ සහය යටතේ වන සංවර්ධන ප්‍රතිපත්ති වැඩසටහනට සමගාමීව ක්‍රියාත්මක කිරීමට යෝජනා කරන ලද අදියර වශයෙන් පහත පරිදි බදු ඉවත් කිරීමට, මුදල්, ක්‍රම සම්පාදන සහ ආර්ථික සංවර්ධන අමාත්‍ය සහ කර්මාන්ත සහ ව්‍යවසායකත්ව සංවර්ධන අමාත්‍ය යන අමාත්‍යවරුන් විසින් ඒකාබද්ධව ඉදිරිපත් කළ 'තෝරාගත් ආනයනික භාණ්ඩ මත ක්‍රියාත්මක වන සෙස් බද්ද, 1979 අංක 40 දරන ශ්‍රී ලංකා අපනයන සංවර්ධන පනත යටතේ අදියර වශයෙන් ඉවත් කිරීම' මැයෙන් වූ 2026 පෙබරවාරි 15 දිනැති අංක 26/0321/804/042 දරන අමාත්‍ය මණ්ඩල සංදේශය සඳහා 2026 මාර්තු 03 දිනැතිව අමාත්‍ය මණ්ඩල අනුමැතිය හිමි විය.

| අනු අංකය | අදියර වශයෙන් බදු ඉවත් කිරීමට අදාළ භාණ්ඩ වර්ග | රේගු සංකේතාංක (HS Code) ගණන | 2026 | 2027 | 2028 | 2029 |
|---|---|---|---|---|---|---|
| 1 | ආන්තික අනුපාතMarginal Rates (<5%) | 46 | 100% | - | - | - |
| 2 | අතරමැදි භාණ්ඩ හා ප්‍රාග්ධන භාණ්ඩ Intermediate and Capital Goods | 693 | 50% | 25% | 25% | - |
| 3 | දේශීය කර්මාන්ත සඳහා සංවේදී අතර මැදි භාණ්ඩ හා ප්‍රාග්ධන භාණ්ඩ Selected Intermediate and Capital Goods sensitive for local industries | 107 | - | 25% | 25% | 50% |
| 4 | රෙදි Fabrics | 265 | 100% | - | - | - |
| 5 | පාරිභෝජන භාණ්ඩ Consumption Goods | 1523 | - | - | - | 100% |
| | එකතුව | **2634** | | | | |

ඒ අනුව, උක්ත පරිදි සෙස් බද්ද අදියර වශයෙන් ඉවත් කිරීමේදී අය කළ යුතු බදු අනුපාතයන් ප්‍රකාශයට පත්කිරීම සඳහා 1979 අංක 40 දරන ශ්‍රී ලංකා අපනයන සංවර්ධන පනත යටතේ නිකුත් කරන ලද නියමය 2026 මාර්තු 10 දිනැති 2479/38 අංක දරන අති විශේෂ ගැසට් පත්‍රය මගින් පළ කරන ලදි.

මෙම සෙස් බදු ඉවත් කිරීම තුළින් දේශීය කර්මාන්ත සඳහා විදේශීය භාණ්ඩ මගින් සිදුවිය හැකි අහිතකර ප්‍රතිඵල අවම කිරීම සඳහා ප්‍රපාතන විරෝධී සහ ප්‍රතිතෝලන බදු පනත (Anti-Dumping and Countervailing Duties Act) යටතේ නීතිමය ක්‍රියාමාර්ග ගැනීමට අවශ්‍ය පසුබිම සකස් කර ඇති අතර, ශ්‍රී ලංකා ප්‍රමිති ආයතනය සමඟ එක්ව කර්මාන්ත හා ව්‍යවසායකත්ව සංවර්ධන අමාත්‍යාංශය මඟින් තෝරාගත් භාණ්ඩ සඳහා ප්‍රමිතීන් (Standards) හඳුන්වා දීමට කටයුතු කරමින් පවතී. 2026.04.01 දින සිට සෙස් බදු අදියර වශයෙන් ඉවත් කිරීමේ සැලැස්ම ක්‍රියාත්මක කිරීම තුළින් 2026 ඉතිරි කාර්තු 03 තුළදී අහිමි වන මුළු සෙස් බදු ප්‍රමාණය දළ දේශීය නිෂ්පාදිතයෙන් 0.04%ක අගයකි.

<u>නියමයන් නිකුත් කිරීම</u>

2.2 ඉන් පසුව 2024 සැප්තැම්බර් 05 දිනැති අංක 2400/25 දරන අති විශෙෂ ගැසට් නිවේදනය යටතේ ප්‍රකාශයට පත්කළ නියමයේ II වැනි වගන්තිය හැරුන කොට, 2026 මාර්තු 03 දිනැති අංක 2478/04 දරන අතිවිශෙෂ ගැසට් නිවේදනය ද ඇතුළුව 1979 අංක 40 දරන ශ්‍රී ලංකා අපනයන සංවර්ධන පනතේ 14 වැනි වගන්තිය යටතේ සෙස් බද්දට අදාළව ප්‍රකාශයට පත්කළ අනෙකුත් සියලු ගැසට් නිවේදන අවලංගු කරමින් මුදල්, ක්‍රම සම්පාදන සහ ආර්ථික සංවර්ධන අමාත්‍යවරයාගේ එකඟතාවය ඇතිව, කර්මාන්ත සහ ව්‍යවසායකත්ව සංවර්ධන අමාත්‍යවරයා විසින්, 2026 මාර්තු 10 දිනැති අංක 2479/38 දරන අතිවිශේෂ ගැසට් නිවේදනය මගින් නියමයක් නිකුත් කරන ලදි.

***<u>කාරක සභාවේ නිරීක්ෂණ</u>***

කාරක සභාව විසින් පහත කරුණු පිළිබඳව නිරීක්ෂණය කළා ය.

- මෙම නියමයන් තීරුබදු ව්‍යුහය තාර්කික කිරීම, පැරා-තීරුබදු ආශ්‍රිත විකෘති කිරීම් අවම කිරීම සහ 2030 වන විට අපනයන ආදායම ඇමරිකානු ඩොලර් බිලියන 20 දක්වා ව්‍යාප්ත කිරීමේ අරමුණින් ශ්‍රී ලංකාවේ අපනයන තරඟකාරිත්වය ඉහළ නැංවීමේ පුළුල් ජාතික උපායමාර්ගයේ කොටසකි.

- අදාළ ගැසට් පත්‍ර මගින් අලුතින් නිර්මාණය කරන ලද HS කේත මත සෙස් (CESS) බද්ද හඳුන්වා දීම, ආහාරයට ගත හැකි තෙල් සහ රෙදිපිළි ආශ්‍රිත HS කේත ඇතුළු තෝරාගත් අයිතම මත සෙස් බද්ද ඉවත් කිරීම සහ 2029 වන විට සම්පූර්ණයෙන්ම ඉවත් කිරීමේ අරමුණින් සෙස් බද්ද අදියර වශයෙන් අඩු කිරීම ක්‍රියාත්මක කිරීම මගින් සෙස් බදු ක්‍රමයට ප්‍රතිසංස්කරණ හඳුන්වා දෙයි. තීරුබදු ව්‍යුහය විධිමත් කිරීමට සහ අපනයන අභිමුඛ කර්මාන්ත සඳහා සහය වීමට රෙදිපිළි මත සෙස් බද්ද ඉවත් කිරීමත් සමඟ ආනයනික රෙදිපිළි මත එකතු කළ අගය මත බද්ද (VAT) හඳුන්වා දී ඇති බව තවදුරටත් නිරීක්ෂණය විය. මීට පෙර සෙස් බද්දට අදාළ වූ ගැසට් පත්‍ර තනි නියාමන මෙවලමක් බවට ඒකාබද්ධ කිරීමෙන් අදාළ රාමුව සරල වනු ඇති බව ද කාරක සභාව සඳහන් කළා ය.

- සකස් කළ ආහාර, තොරතුරු හා සන්නිවේදන තාක්ෂණ (ICT), රබර් ආශ්‍රිත නිෂ්පාදන, කුළුබඩු, නැව් තැනීම සහ සැපයුම් සේවා (logistics) වැනි අංශවල අපනයන වර්ධන ඉලක්ක සපුරා ගැනීම සඳහා ආනයනික අමුද්‍රව්‍ය සඳහා වඩා හොඳ ප්‍රවේශයක්, වැඩිදියුණු කළ යටිතල පහසුකම් සහ දේශීය කර්මාන්ත තුළ ඉහළ අගය එකතු කිරීමක් අවශ්‍ය වේ. අපනයනකරුවන්ට අපනයන සැකසුම් සඳහා තාවකාලික ආනයනය කිරීමේ (TIEP) යෝජනා ක්‍රමය වැනි සහනදායී ක්‍රම යටතේ යෙදවුම් ලබා ගැනීමට හැකි වුවද, දේශීය අමුද්‍රව්‍ය සැපයුම්කරුවන් තරඟකාරී අභියෝගවලට මුහුණ දෙන බවත්, වැට් (VAT) ගෙවීම් සහ මුදල් ආපසු ගෙවීමේ ප්‍රමාදයන් හේතුවෙන් දේශීය සැපයුම්කරුවන්ට මුදල් ප්‍රවාහ සීමාවන්ට මුහුණ දීමට සිදුවිය හැකි බවත් තවදුරටත් සටහන් විය.

- සරල කරන ලද එකතු කල අගය මත බදු (SVAT) ක්‍රමය ඉවත් කිරීම අපනයන අභිමුඛ කර්මාන්ත සඳහා සහය දක්වන දේශීය සැපයුම්කරුවන්ට අභියෝග නිර්මාණය කර ඇති අතර, අපනයන සැපයුම් දාමයන් සඳහා දේශීය සහභාගීත්වය ශක්තිමත් කිරීම සඳහා ආයෝජන මණ්ඩල (BOI) කලාප තුළ පවතින යාන්ත්‍රණයන්ට සමාන යාන්ත්‍රණයන් පිළිබඳව සලකා බැලීම අවශ්‍ය විය හැකිය.

- සෙස් (CESS) සහ වරාය හා ගුවන් තොටුපල සංවර්ධන බද්ද (PAL) වැනි පැරා-තීරුබදු ඓතිහාසිකව ඉහළ ඉදිකිරීම් පිරිවැයක් සඳහා දායක වී ඇති අතර, එය සංචාරක සංවර්ධනය සහ නිවාස ව්‍යාපෘති ඇතුළු අංශවලට බලපා ඇත.

***කාරක සභාවේ නිර්දේශ***

කරුණු සලකා බැලීමෙන් පසුව කාරක සභාව විසින් පහත නිර්දේශය ඉදිරිපත් කළා ය.

- සෙස් (CESS) බද්ද අදියර වශයෙන් ඉවත් කිරීම (2029 දක්වා 25% සිට 50% දක්වා අඩු කිරීම) මගින් දේශීය හා අපනයන අභිමුඛ අංශ දෙකෙහිම ආනයන පරිමාවන් සහ නිෂ්පාදන පිරිවැය වෙනස් වන්නේ කෙසේද යන්න විශ්ලේෂණය කිරීම සඳහා සවිස්තරාත්මක ආනයන බලපෑම් තක්සේරුවක් (import impact assessment) සිදු කළ යුතුය.

***කාරක සභාවේ තීරණය***

කරුණු සලකා බැලීමෙන් පසුව,

- **(235 අධිකාරය වූ) රේගු ආඥා පනතේ 10 වගන්තිය යටතේ යෝජනා සම්මතය** (2026 මාර්තු 03 දිනැති අංක 2478/03 දරන අති විශේෂ ගැසට් පත්‍රයේ පළ කරන ලද)

- **1979 අංක 40 දරන ශ්‍රී ලංකා අපනයන සංවර්ධන පනතේ 14 වගන්තිය යටතේ නියම** (2026 මාර්තු 03 දිනැති අංක 2478/04 දරන සහ 2026 මාර්තු 10 දිනැති අංක 2479/38 දරන අති විශේෂ ගැසට් පත්‍රවල පළ කරන ලද)

සම්බන්ධයෙන් කාරක සභාව එකඟතාවය පළ කළ අතර, ඒ පිළිබඳ රජයේ මුදල් පිළිබඳ කාරක සභාවේ වාර්තාව, 2026 ජූලි මස 08 වැනි දින කාරක සභාවේ සභාපති ගරු (ආචාර්ය) හර්ෂ ද සිල්වා මහතා විසින් පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කළ යුතු බවට තීරණය කළා ය.

## குழுவின் அறிக்கை

அரசாங்க நிதி பற்றிய குழு 2026 ஜூலை மாதம் 06 ஆம் திகதி நடத்திய கூட்டத்தின் போது பின்வரும் தீர்மானம் மற்றும் கட்டளை தொடர்பில் ஆராயப்பட்டது.

- **(அத்தியாயம் 235) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழான தீர்மானம்** (2026 மாச்சு 03 ஆம் திகதிய 2478/03 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது)

- **1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழான கட்டளைகள்** (2026 மாச்சு 03 ஆம் திகதிய 2478/04 ஆம் இலக்க மற்றும் 2026 மாச்சு 10 ஆம் திகதிய 2479/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது)
  *(2026 ஜூன் மாதம் 24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது)*

**குழுவினால் ஆராயப்பட்ட திகதி :** 2026 ஜூலை மாதம் 06 **நேரம்** : பி.ப. 02.00

**<u>கலந்துகொண்ட அரசாங்க நிதி பற்றிய குழுவின் அங்கத்துவ உறுப்பினர்கள் (06.07.2026)</u>**

1. கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா, பா.உ., (தவிசாளர்)
2. கௌரவ சதுரங்க அபேசிங்ஹ, பா.உ.,
3. கௌரவ (கலாநிதி) (செல்வி) கௌஷல்யா ஆரியரத்ன, பா.உ.,
4. கௌரவ ரவி கருணாநாயக்க, பா.உ.,
5. கௌரவ ஹர்ஷன ராஜகருணா, பா.உ.,
6. கௌரவ நிமல் பலிஹேன, பா.உ.,
7. கௌரவ சட்டத்தரணி சித்ரால் பெர்னாந்து, பா.உ.,
8. கௌரவ (செல்வி) சட்டத்தரணி லக்மாலி ஹேமசந்திர, பா.உ.,

- **(அத்தியாயம் 235) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழான தீர்மானம்** (2026 மாச்சு 03 ஆம் திகதிய 2478/03 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது)

**<u>அறிமுகம்</u>**

தேசிய தீர்வைக் கொள்கையினை (National Tariff Policy) நடைமுறைப்படுத்தல் தொடர்பான 2026 வரவு செலவுத்திட்ட முன்மொழிவிற்கு அமைய, அதாவது இந்த நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் மீது ஏற்கனவே நடைமுறையில் உள்ள 0%, 15% மற்றும் 20% ஆகிய சுங்க இறக்குமதி வரி விகிதங்களை 0%, 10%, 20% மற்றும் 30% என்ற வகையில் 04 அடுக்குத் தீர்வை வரியாக (Four-Band Tariff Structure) அமையும் வகையில் 2026 ஏப்ரல் மாதம் முதல் நடைமுறைக்கு வரும் வகையில், திருத்தம் செய்வதற்காக தேசிய தீர்வைக் கொள்கைகள் குழுவின் பரிந்துரைகளுடன் அமைச்சரவையின் அனுமதி கிடைக்கப்பெற்று இருந்த சுங்க இறக்குமதி வரித் திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்காக 1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இறைவரி பாதுகாப்புச் சட்டத்தின் கீழ், தேசிய தீர்வைக் கொள்கையின் வழிமுறைகளுக்கு ஒத்தியங்கும் வகையில் 2026 மார்ச் 03 ஆம் திகதிய மற்றும் 2478/03 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் 2026 ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் வெளியிடப்பட்டு உள்ளது.

இந்த நாட்டின் ஏற்றுமதி இலக்குகளை அடைந்து கொள்ளும் நோக்கில் ஐக்கிய நாடுகள் சபையின் விரிவான பொருளாதார வகைப்பாட்டின் 5 ஆம் பதிப்பினை [United Nations Broad Economic Categories (BEC) - Revision 5] அடிப்படையாகக் கொண்டு கீழே குறிப்பிடப்பட்டு உள்ளவாறு சுங்க இறக்குமதி வரிச் சதவீதங்கள் பிரிவுகளுக்குள் உட்படும் வகையில் சுங்க இறக்குமதி வரிக் கட்டமைப்பில் சீராக்கல்களை மேற்கொள்வதற்கு இந்த வர்த்தமானி அறிவித்தலின் மூலம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளன. அதாவது,

| பிரிவு | சதவீதம் |
|---|---|
| மூலதனப் பொருட்கள் (Capital Goods) | 0% or 10% |
| இடைநிலைப்பொருட்கள் (Intermediate Goods) | 0% or 10% |
| நுகர்வுப் பொருட்கள் (Consumption Goods) | 20% or 30% |

அதற்கு அமைய, பிரதானமான வகையில் நடைமுறையில் இருந்த 0%, 15% மற்றும் 20% ஆகக் காணப்பட்ட சுங்க இறக்குமதி வரி விகிதங்களை மேற்படி BEC வகைப்பாட்டின் 5 ஆம் பதிப்பினையும் அடிப்படையாகக் கொண்டு 0%, 10%, 20% மற்றும் 30% என்ற வகையில் இங்கு கீழே குறிப்பிடப்பட்டு உள்ளவாறு வகைப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளன.

| சுங்க இறக்குமதி வரிக் கட்டமைப்பு | | | | |
|---|---|---|---|---|
| | 2026.03.31 திகதியன்று நிலவிய | | 2026.04.01 ஆம் திகதி முதல் அமுலாகும் | |
| சுங்க இறக்குமதி வரி வகைகள் | சுங்க இியைபு முறைக் குறியீடுகளின் எண்ணிக்கை | சதவீதம் (%) | சுங்க இியைபு முறைக் குறியீடுகளின் எண்ணிக்கை | சதவீதம் (%) |
| 0% (விடுவிக்கப்பட்ட /Free) | 3,725 | 45.6% | 3,756 | 45.7% |
| 10% | - | - | 406 | 4.9% |
| 15% | 526 | 6.4% | - | - |
| 20% | 2,660 | 32.5% | 2195 | 26.7% |
| 30% | - | - | 582 | 7.1% |
| கலப்பு சதவீதங்கள் (Mixed Rates) | 413 | 5.1% | 411 | 5.0% |
| விசேட சதவீதங்கள் (Specific Rates) | 852 | 10.4% | 875 | 10.6% |
| மொத்தம் | 8,176 | 100.0% | 8,225 | 100.0% |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள சதவீத அடிப்படையிலான வரி வீதங்களுக்கு மேலதிகமாக, நடைமுறையில் இருந்த கலப்பு சதவீதங்களிலும் (Mixed Rates) அதனை ஒத்த வகையில் சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. அவ்வாறெனினும், நடைமுறையில் இருந்த விசேட வரி வீதங்களை (Specific Rates) மாற்றமடையாமல் நடைமுறைப்படுத்தப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளன. அவ்வாறே இந்த வகைப்பாடு சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வழிமுறை ஒன்றிற்கு உட்பட்ட வகையில் மேற்கொள்ளப்பட்ட போதிலும், ஏற்கனவே சுங்க இறக்குமதி வரி 0% (விடுவிக்கப்பட்டு/ Free) ஆகவுள்ள பொருட்களுக்காக மேற்படி வரிச் சதவீதத்தினை தொடர்ந்தும் மாற்றமடையாமல் பேணி வருவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளன. அவ்வாறே இந்த BEC வகைப்பாட்டின் 5 ஆம் பதிப்பிற்கு அமைய இடைநிலைப் பொருட்களாக கருதப்பட்ட போதிலும், அரச வருமானத்தில் பாதிப்பு ஒன்று ஏற்பட முடியும் ஆகையினால் 20% ஆக சுங்க இறக்குமதி வரி விகிதங்களின் கீழ் நடைமுறையில் இருந்த இடைநிலைப் பொருட்களுக்கான சுங்க இறக்குமதி வரி இங்கு திருத்தம் செய்வதற்கு உட்படுத்தப்படவில்லை.

எவ்வாறெனினும், இதன் போது பல்வேறு அமைச்சுக்களின் ஊடாக இந்த வகைப்பாடு தொடர்பில் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகள் தொடர்பில் கவனம் செலுத்தி உற்பத்திப் பணிக்காக தேவையான உதவி, வருமான வலுவூட்டல்கள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆகிய விடயங்களுக்கு இடையிலான சமநிலைக்காக தெரிவு செய்யப்பட்ட துறைகளுக்கு இலக்காகக் கொள்ளப்பட்ட சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

அவ்வாறே, தேசிய தீர்வைக் கொள்கைகள் குழுவின் பரிந்துரைகளுடன் அமைச்சரவையின் அனுமதி கிடைக்கப் பெற்று, காலத்திற்கு ஏற்ற தேவைப்பாடுகளின் கீழ், தேசிய விவசாய மற்றும் கைதொழில் துறைகளின் மேன்மைக்காக முன்மொழியப்பட்டு இருந்த பனை மற்றும் பனை சார்ந்த பொருட்கள், காய்கறி வகைகள், உள்நாட்டு மருந்துகள் தயாரிப்பதற்கான மூலப்பொருட்கள், இறப்பர் உற்பத்திகள், செயற்கையாகத் தயாரிக்கப்பட்ட வலைத் துணிகள், நீர்க் குழாய உதிரிப்பாகங்கள், அச்சு இயந்திரங்கள், சலவை இயந்திரங்கள் மற்றும் அறுவை சிகிச்சை ஊசிகள் என்பவற்றிற்காக புதிய தேசிய உப பிரிவு சுங்க இயைபு முறைக் குறியீடுகளை (New National Sub Divisions Harmonized System Codes) இதனோடு இணைந்த வகையில் அமுல்படுத்துவதற்கும், உள்நாட்டுக் கைத்தொழில் துறையின் விருத்திக்காக முன்மொழியப்பட்டு இருந்த இறக்குமதி செய்யப்பட்ட கடதாசிக் குழாய்கள், மருந்துப் பொதியிடலுக்காகப் பயன்படுத்தப்படும் அலுமினிய இழையங்கள், இறக்குமதி செய்யப்பட்ட லைட்டர்கள் மற்றும் முதியவர்கள் மற்றும் சிறுவர்களுக்கான கழிவு அகத்துரிஞ்சல் விரிப்புக்கள் (டயபர்ஸ்) என்பவற்றின் மூலப்பொருட்கள், உற்பத்திக்காக சுங்க இறக்குமதி வரித் திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதனையும் இதனோடு இணைந்த வகையில் மேற்கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளன.

அதற்கு அமைய, 1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இறைவரி பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட, 2026 மார்ச் 03 ஆம் திகதிய மற்றும் 2478/03 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலிலை மேற்படி சட்டத்தின் சட்ட ரீதியான தேவைப்பாடுகளுக்கு அமைய பாராளுமன்றத்தில் அங்கீகரித்துக் கொள்வதற்காகவும் மற்றும் இந்த சுங்க இறக்குமதி வரித் திருத்தங்களை சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (235 ஆம் அதிகாரம்) 10 ஆம் பிரிவின் கீழ் முன்மொழிவு ஒன்றாக பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்வதற்காகவும் முன்வைக்கப்பட்டு உள்ளது.

***<u>குழுவின் அவதானிப்புக்கள்</u>***

கலந்துரையாடலின் பின்னர் குழு பின்வருவனவற்றினை அவதானித்தது;

- இத்தீர்மானம், தேசிய சுங்கவரி கொள்கைக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டது. இக்கொள்கை, தொழில்துறை மேம்பாடு, வர்த்தக தாராளமயமாக்கல் மற்றும் வர்த்தக நடைமுறைகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் முன்னறிவிக்கத்தக்க தன்மையை (Predictability) மேம்படுத்துவதுடன், துணைச் சுங்கவரிகளின் (Para-Tariffs) மீதான சார்பினைக் குறைத்து சுங்கவரி கட்டமைப்பை நியாயப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், ஐக்கிய நாடுகளின் பரந்த பொருளாதார வகைப்பாடுகள் (United Nations Broad Economic Categories - BEC) (Revision 5)அடிப்படையில், மூலதனப் பொருட்கள் மற்றும் இடைநிலைப் பொருட்கள் பொதுவாகக் குறைந்த சுங்கவரி விகிதங்களுக்கும், நுகர்வுப் பொருட்கள் உயர்ந்த சுங்கவரி விகிதங்களுக்கும் உட்படுத்தப்படும் வகையில், முன்னர் நடைமுறையில் இருந்த மூன்று நிலைச் சுங்கவரி கட்டமைப்புக்கு (Three-Band Structure) பதிலாக 0%, 10%, 20% மற்றும் 30% ஆகிய நான்கு நிலை சுங்க இறக்குமதி வரி (CID) கட்டமைப்பு அறிமுகப்படுத்தப்படுவதாகக் குறிப்பிடப்பட்டது.

- நீண்டகாலக் கொள்கை நோக்கமாக, இடைநிலைப் பொருட்களுக்கு விதிக்கப்படும் சுங்க இறக்குமதி வரி (CID) விகிதத்தை 10% ஆகவும், அதிகபட்சமாக 20% ஆகவும் மட்டுப்படுத்தி, இறுதிப் பொருட்களுக்கான சுங்கவரி விகிதங்களை 20% முதல் 30% வரையிலான எல்லைக்குள் பேணுவதன் மூலம் சுங்கவரி பாதுகாப்பை படிப்படியாகக் குறைப்பது நோக்கமாக உள்ளதாகக் குறிப்பிடப்பட்டது. மேலும், சுங்கவரி அட்டவணையில் 8,225 ஒத்திசைக்கப்பட்ட முறைமை (Harmonized System - HS) குறியீடுகள் உள்ளதாகவும், அவற்றில் மூலதன மற்றும் இடைநிலைப் பொருட்களுடன் தொடர்புடைய 3,725 HS குறியீடுகள் துணைச் சுங்கவரிகளிலிருந்து விலக்கப்பட்டுள்ளதாகவும், இத்தீர்மானத்தின் மூலம் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான சுங்கவரி வகைப்பாடுகள் மட்டுமே திருத்தப்படுகின்றன என்றும், பூஜ்ஜிய சுங்கவரி (Zero-Rated) விகிதம் கொண்ட பெரும்பாலான வகைப்பாடுகள் மாற்றமின்றி தொடர்கின்றன என்றும் குறிப்பிடப்பட்டது.

- தற்போதுள்ள சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களின் (FTAs) கீழ் வழங்கப்படும் சுங்கவரி சலுகைகள் (Tariff Concessions) படிப்படியாக அமுல்படுத்தப்பட்டு வருவதாகவும், புதிய ஒப்பந்தங்களும், ஏற்கனவே உள்ள ஒப்பந்தங்களுக்கான திருத்தங்களும் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு முன்னர் மதிப்பாய்வில் உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டது. மேலும், FTA உறுதிப்பாடுகளின் கீழ் உள்ள பொருட்கள், பின்னர் மேற்கொள்ளப்படும் சுங்க இறக்குமதி வரி (CID) திருத்தங்களுக்கு உட்படுத்தப்படமாட்டாது எனவும் குறிப்பிடப்பட்டது.

- நிதி அமைச்சு, சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட சுங்கவரி வகைப்பாட்டு (Tariff Classification) முறைகளைப் பின்பற்றுவதுடன், சுங்கவரி முன்மொழிவுகள் (Tariff Proposals) தயாரிக்கப்பட்ட பின்னர் சம்பந்தப்பட்ட துறைகளுடன் கலந்தாலோசனைகளையும் மேற்கொள்வதாகக் குறிப்பிடப்பட்டது.

- விசேட பண்ட வரி (SCL), குறிப்பாக உணவுப் பொருட்கள் தொடர்பில், தேவையான இடங்களில் உள்நாட்டு விவசாய உற்பத்தியை பாதுகாப்பதற்கான கொள்கைக் கருவியாக தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்பட்டது.

- துணைச் சுங்கவரிகளை படிப்படியாகக் குறைப்பது, குறிப்பாக ஓடுகள் (Tiles) மற்றும் எஃகு (Steel) தொழில்துறைகள் உள்ளிட்ட சில உள்நாட்டு தொழில்துறைகளில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் எனவும், தற்போதைய துணைச் சுங்கவரி முறை, கட்டுமானம் மற்றும் சுற்றுலா போன்ற துறைகளில் உள்ளீட்டுச் செலவுகளை அதிகரித்துள்ளதாகவும் குழு அவதானித்தது. மேலும், தொழில்துறைகளின் போட்டித்திறனை மேம்படுத்துவதற்காக நிதி மற்றும் தொழில்நுட்பத்திற்கான அணுகலை வலுப்படுத்தும் நடவடிக்கைகளுடன் சுங்கவரி சீர்திருத்தங்கள் இணைந்து மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் குழு அவதானித்தது.

- சில துறைகளில், டம்பிங் (Dumping) மற்றும் சுங்க மதிப்பீட்டில் முறைகேடுகள் தொடர்பான குற்றச்சாட்டுகள் தொடர்ந்தும் நிலவுவதாகவும், குறைவான பெறுமதி விலைப்பட்டியல் (Under-Invoicing) மற்றும் மதிப்பீட்டு அபாயங்களை கையாளுவதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தியுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டது.

- வர்த்தகத் திணைக்களத்தின் இணையத்தளம், 2021 ஆம் ஆண்டிலிருந்து வர்த்தகம் தொடர்பான தரவுகளுடன் புதுப்பிக்கப்படாததால், வர்த்தக ஒப்பந்தங்களின் அமுலாக்கம் மற்றும் அவற்றின் தாக்கம் தொடர்பான புதுப்பிக்கப்பட்ட தகவல்களை பொதுமக்கள் அணுகுவதில் கட்டுப்பாடுகள் ஏற்பட்டுள்ளதாகக் குழு அவதானித்தது.

***<u>குழுவின் விதப்புரைகள்</u>***

பரிசீலனையின் பின்னர் குழு பின்வருவனவற்றினை விதந்துரைத்தது;

- வர்த்தக அமைச்சு, 2021 ஆம் ஆண்டிலிருந்து புதுப்பிக்கப்படாத தனது உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் உள்ள வர்த்தகப் பருமன் (Trade Volume) தொடர்பான தரவுகளை உடனடியாகப் புதுப்பிக்க வேண்டும். மேலும், அனைத்து சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களின் (FTAs) கீழான வர்த்தகப் பருமன் செயல்திறனை (Trade Volume Performance) தனித்தனியாகக் குறிப்பிட்டு வெளியிடுவதன் மூலம், தரவு அடிப்படையிலான பொதுக் கலந்துரையாடலை உறுதிப்படுத்த வேண்டும்.

- வர்த்தகம் மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம், நிதி அமைச்சு மற்றும் கைத்தொழில் அமைச்சு ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து, புதிய நான்கு நிலை சுங்கவரி கட்டமைப்பான 0%, 10%, 20% மற்றும் 30% காரணமாக ஏற்படும் தேவை–வழங்கல் (Demand–Supply) மாற்றங்களை கணக்கில் கொண்டு, அறிவியல் அடிப்படையிலான சுங்கவரி உருவகப்படுத்தல் (Tariff Simulation Modeling) முறையை

நடைமுறைப்படுத்த வேண்டும். அத்துடன், அதன் நிகர விளைவுகளை (Net Effect) உள்நாட்டு தொழில்துறைகளின் மீது மதிப்பீடு செய்ய வேண்டும்.

- மீள்ஏற்றுமதி வர்த்தகம் (Entrepot Trading) தொடர்பான வரிவிதிப்பு குறித்து விரிவான சரிபார்ப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். குறிப்பாக, உள்நாட்டு இறைவரித் திணைக்களம், சுங்கத் திணைக்களம் பின்பற்றும் ஒழுங்குமுறை அணுகுமுறையுடன் இணக்கமான வகையில் இதனை கையாளுகிறதா என்பதை உறுதிப்படுத்த வேண்டும். மேலும், முரண்பட்ட விளக்கங்கள், இலங்கையை போட்டித்தன்மை மிக்க பிராந்திய வர்த்தக மையமாக உருவாக்கும் தேசிய நோக்கத்தை பாதிக்காதவாறு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

- எதிர்காலத்தில் அறிமுகப்படுத்தப்படும் எந்தவொரு இறக்குமதி கட்டுப்பாடுகளும் அல்லது தற்காலிக கொள்கை நடவடிக்கைகளும், நடைமுறை வர்த்தகத் தரவுகள் மற்றும் அறிவியல் நியாயப்படுத்தல்களின் அடிப்படையில் முழுமையாக உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே அமுல்படுத்தப்பட வேண்டும். நியாயமான அடிப்படை இன்றி இத்தகைய கொள்கைகள் அமுல்படுத்தப்படுவதால் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகள் தவிர்க்கப்பட வேண்டும்.

- **1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழான கட்டளைகள்** (2026 மார்ச்சு 03 ஆம் திகதிய 2478/04 ஆம் இலக்க மற்றும் 2026 மார்ச்சு 10 ஆம் திகதிய 2479/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது)

**அறிமுகம்**

